RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijot2229

Asian Research Association

INDIAN JOURNAL OF TAMIL

# அறுபடை வீட்டில் திருமுருகன் திருப்பொலிவு

## இரா. மதன்குமார் [அ, *]

[அ] மொழிகள் துறை-தமிழ்ப்பிரிவு, கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர்-641021, தமிழ்நாடு, இந்தியா

# The Holy Revival of Thirumurugan at Arupatai Veedu

## R. Madhankumar [a, *]

[a] Department of Languages–Tamil Wing, Karpagam Academy of Higher Education, Coimbatore-641021, Tamil Nadu, India.
*Corresponding author Email: madhan.r@kahedu.edu.in

DOI: https://doi.org/10.54392/ijot2229
Received: 09-03-2022; Revised: 19-05-2022; Accepted: 22-05-2022; Published: 29-05-2022

**Abstract:** The Thirumurugatrupadai worships Murugu, the ancient deity of the past. Literature guides spiritual attainment through civilised world life. "Thirumurugatrupadai" stands as proof of such a purpose. Thirumurugatrupadai guides us to attain freedom from birth with the highest aim of 'listening to the greatness of the great'. The ideological aim is that the Lord himself will come as a wise teacher to conquer the mature soul. It may be said that the concept of the poet who has been presented with a gift orienting the poet who is yet to receive the prize is similar to the position in which Gnanaguru directs the matured soul towards God. The manner, in which the holiness of God is conveyed in the Arupatai Veedu (The Six Abodes of God Murugan), such as Nakkeerar, Thiruparankundram, etc., signifies the realisation of the divine power in all the six yogic states of the body and the eternal attachment to the path of bliss. Moreover, the way in which the worship of Lord Murugan has been put forward in the form of hill-topography is the guidance of the realisation of "sovereignty in nature'. Thirumurugan's position as the inner light in all objects can be seen in Thiruparankundram, the greatness of Thirumurugan, the precious being, with six faces and twelve hands because of his great grace to the living beings, in Thiruchiralaivai, in Thiruavinankudi, where Thirumurugan is the great object worshipped by all, in Thiruvinankudi, where Thirumurugan is the inner object of the six letters, in Thiruveragam, and in Thiruthanikai, the greatness of Kumaran resides. In addition, Thirumurukatrupatai enables the devotees to realise the ability of Thirumurugan to reside everywhere and is praised as a temple for redressal of grievances by placing it in the eyes of Pazhamuthir Solai. Moreover, Thirumurugan's ability to show his great form, which transcends the sky, as a small one for his devotee to see, is indicative of the devotional principle that 'God is always humble to his devotees'.

**Keywords:** Thirumurugatrupadai, Arupatai Veedu, Holiness, Nakkeerar

## முன்னுரை

வீடுபேறு பெறுவதற்குத் தகுதி உடையவனை திருமுருகன்பால் ஆற்றுப்படுத்துகிற முறைமையில் அமைந்துள்ள திருமுருகாற்றுப்படையானது திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், திருத்தணிகை மற்றும் பழமுதிர்சோலை ஆகிய படைவீடுகளின் வழியே நிகழ்கின்ற ஆன்மாவின் அருள்பயணத்துக்கு வழிகாட்டுகிறது. 'முருகனது சேவடியின் கண் ஆற்றுப்படுத்துவோன் பல பிறவிகளினும் இறை பணி நின்று அறம் நிரம்பிய அருளுடை நெஞ்சத்தினை உடையவனாய்த் தக்க பருவம் பெற்றுழி, இறைவனே நல்லாசிரியன் வடிவு கொண்டு அருளாலே அவனை வலிந்து எதிர்ப்பட்டு அவ்வீடு பேற்றுக்குரிய நெறிகூறி ஆற்றுப்படுத்துகின்றான்' என இந்நூல் நுவல் பொருளை பெருமழைப்புலவர் பொ.வே. சோமசுந்தரனார் அவர்கள் சித்தாந்தநோக்கில் விளக்கியுரைப்பார். மேற்கண்டவாறு திருமுருகனே நல்லாசிரியனாக நமக்கு எதிர்ப்படுவதை உணர்வதற்கு ஊனக்கண் பயன்படாது. நமக்கு ஞானக்கண் வாய்க்க, உள்ளக்கிழியில் திருமுருகனின்

திருவுருவை நிலையாகப் பதித்துக் கொள்ளவேண்டும். அப்பெருமுயற்சிக்கு உற்ற துணையாக நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் அறுபடைவீடுகளிலும் விளங்குகின்ற திருமுருகனின் அருள்பொலிவை எடுத்தோதியுள்ள வகையை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

## திருப்பரங்குன்றத்தில் திருக்காட்சி

பரமாகிய முருகன் உறைகின்ற குன்றமாதலால், 'பரங்குன்றம்' எனப்பெறுகிறது. திரு - கண்டார் விரும்புகின்ற தெய்வத்தன்மை. அதனால் திருப்பரங்குன்றம் என்பது பெயராகிறது. பரம்பொருளாவது, உள்ளும் புறமும் கடந்தும், தோற்றமும் முடிவும் இல்லாது, குணமும் குறியுமற்று விளங்குவது. ஆயினும், தீராத அருள்வேட்கையுடன் ஞானக்கண் கொண்டு நோக்கத் தலைப்படுவாருக்கு, உள்ளிருந்து உணர்த்தி, காணுகிற பொருள் யாவிலும் நீக்கமற நிறைந்திலங்குகின்ற பேரொளிப் பிழம்பாக திருமுருகன் திருப்பரங்குன்றத்தில் விளங்குவதாக நக்கீரர் உணர்த்தியருளியுள்ளார்.

பேரிருளால் உலகம் சூழப்படுகின்ற இரவுப்பொழுதில் அனைத்து உயிர்களும் உறக்கமே தமது இயல்பாக மூழ்கிக்கிடப்பன எனலாம். கீழைக்கடலிடத்தே ஞாயிற்றின் புதுவொளி பரவி, எங்கும் ஒளி வெள்ளம் பாய்கின்ற நிலையில் உயிர்கள் உறக்கம் நீங்கி, புத்துணர்வு மேலிட்டு, தாமும் ஒளிப்பொருளின் கூறாக விளங்க முற்படும். இதுபோன்றே, பிறப்புகளாகிய இருளில் மூழ்கி, அறியாமையே தமது இயல்பாக விளங்குகின்ற உயிர்கள், இறைவனின் பேரருள் வீழ்ச்சியாகிய சத்திநிபாத வகையால் இறைவனின் திருவடிக்கு ஆட்பட்டிருக்கின்ற அருளாவல் கொள்கின்றன. உயிர்களிடத்தில் நிகழ்வதாகிய திருவருள் வீழ்ச்சியும், இருளாகிய மலநீக்கமும், திருவருளால் விளங்குவன. அத்திருவருளே ஞானப்பேரொளியாகி திருமுருகன் என்ற திருப்பெயர்க்கொண்டு விளங்குவதையும் உணர்த்தும் முகமாகவே நக்கீரர்,

"உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு

பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்(கு)

ஓஅற இமைக்குஞ் சேண்விளங்கு அவிரொளி"

என்ற வகையில் நக்கீரர் திருமுருகனை ஞானப்பிழம்பாகக் காட்சிப்படுத்தியுள்ளார் (Vasanthakumar, 2017). அரிதினும் அரிய பரம்பொருள், உயிர்கள்பால் கொள்கின்ற பெருங்கருணையால் உருவுகொண்டு எழுந்தருள்கின்ற எளிமையை உணர்த்துகிறவண்ணம், 'உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்தாள்' என்று குறித்தருளியுள்ளார்.

திருத்தாளின் பொலிவழகையும், திருத்தோளின் பேரருள் சிறப்பினையும் ஓதிய நக்கீரர் திருமுருகனின் திருமுகத்துச் செவ்வியை எடுத்தோத முற்படுங்கால், தெய்வயானை அம்மையின் திருநுதல் விளங்குகின்ற திருமுகப் பொலிவையும் குறித்தருளியுள்ளார். அம்மையின் திருமுகமானது திருமுருகனின் திருமுகப்பொலிவின் சாயலால் மேலும் பொலிவெய்தி விளங்குகிறது. நக்கீரர் அவ்வருள் சிறப்பினைக் குறிக்கின்ற வண்ணமும், 'மறு இல் கற்பின் வாள்நுதல் கணவன்' என்று குறித்தருளியுள்ளார் (Puliyur Kesigan, 2013).

## திருச்சீரலைவாயில் திருக்காட்சி

திருப்பரங்குன்றத்தில் பரமான ஒளிப்பிழம்பென திருமுருகனை உணர்த்தியருளிய நக்கீரர், ஆறு முகமும், பன்னிரு திருமுகமும் கொண்டமைகின்ற அருள்கோலப்பொலிவினை திருச்சீரலைவாயின் திருக்காட்சியாகக் குறித்தருளியுள்ளார்.

இறைவனை மணிவாசகர், 'சோதியே சுடரே சூழொளி விளக்கே' என்று போற்றுவார். ஆறுமுகனென்று பெயர் கொண்ட பெருமானே, அருக்கனில் சோதியாகவும், திங்களில் ஒளியாகவும், தீயினில் வெம்மையாகவும் விளங்குகிறான். அவ்வகையில் அவனே உலகுக்கு ஒளியாக விளங்குகிறான். அத்தத்துவத்தை விளக்குகிற வகையில், திருமுருகனின் ஒரு திருமுகமானது சுடரனைத்துக்கும் ஒளி வழங்குவதாக நக்கீரர் குறித்தருளியுள்ளார்.

"மாயிருள் ஞாலம் மறுஇன்றி விளங்கப்

பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம்”

மற்றுமொரு திருமுகம் உண்மை அன்பாகிய ஆர்வலர்க்கு உவகையுடன் வேண்டுவனவற்றை அருள்கிறது (Vasanthakumar, 2017). திருச்சீரலைவாயிலிருந்து பெருமான் உண்மை அடியவர்க்கு வேண்டியதை நிறைவாகத் தந்தருள்கின்றான். 'முட்டாது அடியே இறைஞ்சி இரந்த எல்லாம் எமக்கே பெறலாம்' என்னும் அன்பர் உள்ளம் கரந்து நில்லாக் கள்வன்' என்பது மணிவாசகரின் அருளனுபவப் பெருவாக்கு. 'வேண்டியபோது அடியார் வேண்டிய போகமது வேண்ட வெறாதுதவு பெருமாளே!' என்பது அருணகிரிநாதரின் திருவாக்கு. பெருமான், உண்மையடியாரை தானே நாடிச்சென்று வேண்டுவனவற்றைத் தந்தருள்கின்ற அருள்தன்மையுடன் மிக எளியவனாக விளங்குகிற திறத்தை, 'அவரவர் ஏவலாளனும் நீயே' என்று பரிபாடல் போற்றுகிறது. அத்தகைய பெருமானின் திருமுகச் செவ்வியை நக்கீரர்,

“ஒருமுகம் ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகிக் காதலின் உவந்து

வரங் கொடுத்தன்றே” என்று உணர்த்தியுள்ளார் (Vasanthakumar, 2017).

வேதமும் வேள்வியும் இறைநிலையே என்பதனை, 'வேதமும் வேள்வியும் ஆயினார்' எனத் திருவாசகம் போற்றியுரைப்பதனைத் திருமுருகாற்றுப்படையும் உணர்த்துகிற வண்ணம், திருமுருகப்பெருமானின் திருமுகத்தில் ஒன்று வேள்வியைக் காத்தருள்வதாகக் குறித்தருள்கிறது. மற்றுமொரு திருமுகமோ, ஞானியர்க்கு மெய்ப்பொருளை உணர்த்துகிற மெய்ஞானத் திருமுகமாக விளங்குகிறது. திருமுருகன் மற்றுமொரு திருமுகத்தால் மறக்கருணை அளித்தருள்கின்றான். அத்திருமுகத்தாலேயே பெருமான் அசுரர்களை தேய்த்தருளியதாக திருமுருகாற்றுப்படை உணர்த்துவதை,

“ஒருமுகம் செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்

கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட்டன்றே”

என்ற அடிகளால் உணரலாம் (Jagannathan, 1978). திருமுருகனின் ஆறு திருமுகங்களுள் ஒளி வழங்குகின்ற முகமும், ஆர்வலர்களுக்கு அருள்கின்ற முகமும், வேள்வி காக்கின்ற முகமும், ஞானத்தை உணர்த்துகிற முகமும், வீரத்தின் விளைநிலமாக ஒரு முகமும் விளங்குகின்றன. மற்றும் ஒரு திருமுகமோ, உலகுயிர்கள் இன்பநெறி நின்று ஏற்றம்மிகு வாழ்வு வாழ திருச்சீரலைவாயில் வள்ளிநாயகியுடன் மகிழ்ந்து விளங்குவதாக நக்கீரர் குறித்தருளியுள்ளார்.

ஆன்மா, ஐம்புலன்களாகிய வேடர்களின் பிடியில் அகப்பட்டிருந்த வாழ்வை நீத்து, இறைவனை அடைந்துய்ய வேண்டும் என்கிற சிந்தாந்தநோக்கின் குறியீடாகவே வள்ளியம்மையார் வேடர் குலத்தில் பிறந்து வளர்ந்ததாகவும், திருமுருகன் தாமே அவரை நாடிச் சென்று, தம்பால் மயக்கம் கொள்ளச்செய்து ஆட்கொண்டருளியதாகவும் வரலாறு. இதனைத் திருமுருகாற்றுப்படை,

“ஒருமுகம் குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்

மடவரல் வள்ளியொடு நகைஅமர்ந் தன்றே”

என விளக்குகிறது (Vasanthakumar, 2017).

## பன்னிரு கரங்களின் அருள்பொலிவு

திருமுருகனின் திருக்கரங்களில் ஒன்று வேலேந்தும். காக்கின்ற முத்திரையுடன் மற்றுமொரு திருக்கரமானது மார்பில் தங்கியிருக்கும். மற்றொரு திருக்கரமானது மலர் மாலையுடன் விளங்கும். ஒரு திருக்கரமானது போர்க்கள வேள்வியைத் தாங்கி நிற்கும். ஒரு திருக்கரமானது நாததத்துவத்தின் அடையாளமாகிய மணியை ஒலிக்கச் செய்யும். ஒரு திருக்கரமானது, விண்ணின்று மழை பொழிய ஆணை தந்தருளிய வண்ணம் விளங்கும். மற்றுமொரு திருக்கரமானது தேவ மாதர்களுக்கு மண மாலையினைச் சூட்டி மகிழும் என்று திருமுருகாற்றுப்படை விளக்குகிறது (Sivagnanam, 2003).

திருமுருகன், முத்தொழிற்கும் உரிமையுடைய ஞானப் பேரொளியானவன். அவன், திருவருளைப் பொலிகின்ற திருத்தாளினையும், திருக்கரங்களையும் கொண்டவனாக, தெய்வயானையார்

திருக்கணவனாக, கடப்ப மாலை புரள்கின்ற மார்பினனாக, செங்காந்தள் கண்ணி சூடியவனாக, நிலைத்த புகழும் வெற்றியும் உடையவனாக விளங்குகிறான். அவன் எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்துறைந்து அருளவல்லவனாகவும், திருச்சீரலைவாயில் சிறப்புற எழுந்தருளி விளங்கவல்லவன். திருமுருகனை, திருச்சீரலைவாயின்பால் தரிசித்து நிறைந்த பேறாகிய வீடுபேற்றினைப் பெறலாம் என்று நக்கீரர் அடியவரை ஆற்றுப்படுத்துகிறார் (Vasanthakumar, 2017).

## திருவாவினன்குடி

இத்திருத்தலத்துக்கு, 'சித்தன் வாழ்வு' என்னும் பெயர் விளங்குவதை நச்சினார்க்கினியர் தமது உரையில் சுட்டியுள்ளார். அங்கு முனிவர் முன்னே செல்லவும், அவரைத் தொடர்ந்து கந்திருவர் யாழ் மீட்டிச் செல்லவும், அடியார் திருக்கூட்டம் திருமுருகனை வழிபடச் செல்கின்ற திருக்காட்சி விளங்கும். இத்திருத்தலத்தை நீங்காதிருந்து திருமாலும், உருத்திரனும், இந்திரனும், பிரமனும், பதினெண்கணங்களும் பெருமானை வணங்குகிற சிறப்பு உண்டு. பெருமான் அசுரரை வென்றொழித்து, தெய்வயானை அம்மையை மணந்தவேளையில், 'வானவர்களது வெற்றிக்குக் காரணம் தமது திருக்கைவேலே என்றார். வெற்றிவேலுக்கு அத்தகையதோர் ஆற்றல் தன்னால் அமைந்ததாக நான்முகன் அறியாமையால் தருக்கினான். அவனது தருக்கினை அழித்து, நல்லறிவைத் தந்தருள்கின்றவகையில், படைத்தல் தொழிலுக்குரிய அவனது தலைமைத்தன்மையைப் பெருமான் அகலச் செய்தார். அதனால் படைத்தல் தொழில் பாதிக்கப்பட்டநிலையில், திருமாலும், உருத்திரனும் தமது தொழிலில் முட்டுப்பாடு ஏற்பட்டு நின்றனர். அத்தடை நீங்க, நான்முகனின் படைத்தல் தொழிலுக்குரிய தலைமையை அவனுக்கு மீண்டும் தந்தருளவேண்டி, நான்முகனும், உருத்திரனும் மற்றைய வானவரும், அசுரரும், தைத்தியரும், கருடரும், கின்னரரும், கிம்புருடரும், இயக்கரும், விஞ்சையரும், இராக்கதரும், கந்தருவரும், சித்தரும், சாரணரும், பூதரும், பைசாசகணமும், தாரகணமும், நாகரும், ஆகாயவாசிகளும், யோகபூமியருமாகிய பதினெண்கணத்தவரும் தன்னை வழிபட்டு உய்கின்ற வண்ணம், திருமுருகன் தெய்வயானை அம்மையுடன் திருவாவினன்குடியில் வீற்றிருக்கின்ற அருள் சிறப்பினை திருமுருகாற்றுப்படை,

"தாஇல் கொள்கை மடந்தையொடு சில்நாள்

ஆவி னன்குடி அசைதலும் உரியன்"

எனச் சுட்டியுள்ளது (Sivagnanam, 2003).

## திருஏரகம்

இப்படை வீடானது காவிரிக்கரையில் அமைந்துள்ளது. திருமுருகனை இத்திருத்தலத்திலிருந்து வேதங்களால் வழுத்தி வழிபடுகின்ற அந்தணர்களின் மாண்பு நக்கீரரால் திருமுருகாற்றுப்படையில் சுட்டப்பட்டுள்ளது. அவர்கள் வேதம் ஓதுதல், வேள்வி செய்தல், விரதம் பூணுதல், குலகுருவாக விளங்குதல், தலைவர்தம் பாங்கராகத் திகழ்தல் மற்றும் தமிழ் நலம் மிக்க புலவராக வீற்றிருத்தல் என நன்னலம் பலவும் வாய்க்கப்பெற்றவர்கள். அவர்கள் திருமுருகனின் திருப்பெயராகிய ஆறெழுத்தை ஓதுவார்கள். மனதுக்குள் மந்திரத்தை எண்ணிச் செபிப்பது மானஸம். பிறர் காதுக்கு எட்டாத வகையில், நாவில் புரள ஓதுவது மந்தம். வாய்விட்டு வெளிப்படையாகச் சொல்லுவது மந்தம். மந்தமே மந்திரசபத்துக்கு மிகவும் சிறந்தது. திருஏரகத்து அந்தணர்கள், தலைமேல் குவிந்த கையினராக, ஆறெழுத்து மந்திரமானது நாவினில் புரளும்படியாக, நறுமலர்களை ஏத்தி, நாளும் திருமுருகனின் திருப்புகழைத் துதித்து வழிபடுபவர்கள். 'நமோ குமாராய' என்பது ஆறெழுத்துத் திருமந்திரம் என்பது நச்சினார்க்கினியரின் உரைக்குறிப்பு.

"உச்சிக் கூப்பிய கையினர்தற் புகழ்ந்து

ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி

நாஇயல் மருங்கின் நவிலப் பாடி

விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிதுவந்து

ஏரகத்து உறைதலும் உரியன்" (Jagannathan, 1978)

## குன்றுதோறும் ஆடுவான்

திருஏரகத்தில் உறைகின்ற பெருமானே, குன்றுதோறும் குறமகளிருடன் குரவையாடி மகிழ்ந்துறைவான். கானவர் குரவைக்கூத்தாடுவர் அவர்தம் மகளிரும் உடன் இணைந்து ஆடுவர். அவ்விடங்களில், திருமுருகன் சிவந்த ஆடை உடுத்தி, அசோகின் தளிர் சூடி, வெட்சி மாலை புனைந்து, குழலும் கொம்பும் முழங்க, மயிலேறி, கோழிக்கொடி உயரப் பறக்கும்படியாக வந்து, குரைவையாடலுக்கு முதற் கை கொடுத்து குரவையாடி மகிழ்வான்.

மகளிர் பலர் கைகோத்து ஆடுகிற கூத்தாகிய குரவையானது குறிஞ்சிக்கும், முல்லைக்கும் சிறப்பாக அமைவதாகும். குறிஞ்சியில் 'குன்றக் குரவை' என்றும், முல்லையில் 'ஆய்ச்சியர் குரவை' என்றும் அவ்வாடல் வழங்கப்பெறும். திருமுருகன் குறிஞ்சிக் குரவையில் தலைக்கை தந்து ஆடுகிற காட்சியினை திருமுருகாற்றுப்படை,

"முழவுஉறழ் தடக்கையின் இயல ஏந்தி

மென்தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து"

எனப் போற்றுகிறது (Sivagnanam, 2003).

திருமுருகன் குன்றுகளெங்கிலும் குரவையாடி மகிழ்வதனால் குன்றம் அனைத்தும் அவன் உறைகின்ற திருநிலையங்களாகின்றன. இந்நிலையினைத் தெளிவாக உணர்கின்ற வகையில், 'குன்றுதோறாடல்' என்ற சொல்லை, 'பல குன்று' என்று தெளிந்த சொல்லால் விளங்க உணரலாம். திருமுருகன் உறைகின்ற பல குன்றுகளிலும் திருத்தணிகை முதன்மை பெற்றுத் திகழ்வதை உணர்த்துகிற வண்ணம், குன்றக்குரவை நிகழ்கின்ற அருள்நிலையமாக திருத்தணிகையை நக்கீரர் சுட்டியுள்ளார்.

## பழமுதிர்சோலை

திருமுருகனை வழிபட்டுய்வதற்குக் குன்றுகளெங்கிலும் நிகழ்கின்ற குரவையாடல் மட்டுமன்றி, வேலன் வெறியாடலும் கருவியாகும். அவ்வொழுக்கத்தை நக்கீரர் பழமுதிர்சோலையாகிய படைவீட்டுக்குரிய குறிப்புகளுடன் வைத்து உணர்த்தியுள்ளார் (Vasanthakumar, 2017).

தினையரிசியுடன் பல வண்ண மலர்களைக் கலந்து, ஆட்டுக்கிடாயின் இரத்தத்தைக் கலந்தமைத்து, கோழிக்கொடியுடன் நிறுத்தப்பட்ட வெறியாட்டுக் களம் திருமுருகனுக்குரியதாகும். ஊரின் விழா மன்றமும், தன் மேல் அன்புடையார் போற்றுகிற அனைத்திடங்களும், ஆற்றிடைக் குறையும், ஆறு, குளங்களிலும், ஊர்களிலும், சந்திகளிலும், கடம்ப மரத்திலும், அம்பலத்திலும், கந்தழியிலும் திருமுருகன் உறைவான்.

கோழிக்கொடியை நிறுத்தி, நெய்யுடன் வெண்சிறு கடுகினை அப்பி, மந்திரம் கூறி, வண்ண மலர் பல தூவி, இருவேறு வண்ண உடை உடுத்தி, சிவந்த காப்பினையும் கையில் கட்டி, வெண்பொரியினைத் தூவி, வெள்ளரிசியுடன் ஆட்டுக்கிடாயின் இரத்தமும் பலியாக இடப்படுகிற வெறியாட்டுக்களத்தில் முருக வழிபாடு நடைபெறும்.

மஞ்சளுடன் சந்தனம் முதலிய நறுமணப் பொருள்கள் தெளிக்கப்பெற்று, செவ்வலரி மலர்மாலை அசைய வேலன் வெறியாடுவான். நறுமண தூபத்துடன், குறிஞ்சிப்பண்ணில் மலை நிலமும், மலைக்கிழவோனாகிய திருமுருகனும் வாழ்த்தப்பெறுவர். திருமுருகனுக்குரிய வாச்சியங்கள் பலவற்றையும் குறமகள் இசைக்க நடைபெறுகின்ற வெறியாட்டுக் களமானது திருமுருகனுக்குரியதாகும். மணியின் நாதம் அங்கு முழங்க, திருமுருகனின் யானையாகிய பிணிமுகமானது வாழ்த்தப்பெறும். வேண்டுவோர் வேண்டுவனவற்றைப் பெற்று மகிழ்கின்ற வெறியாட்டுக்களத்தில் திருமுருகன் என்றும் நிலைத்திருந்து அருள்வான்.

## திருமுருக வணக்கமும் வாழ்த்தும்

திருமுருகனின் காண்பதற்கரிய காட்சியைக் கண்ட அளவில், சிரம் மேல் கரம் கூப்பி, திருவடியானது தலையுறும் வண்ணம் அடிபணிய வேண்டும். முனி பத்தினியர் அறுவரால் பெறப்பட்டு ஆறு வடிவைப் பெற்றவனே, கல்லாலின் கீழமர்ந்த பெருமானின் புதல்வனே, பார்வதியின் மகனே, பகைவர்க்குக் கூற்றுவனே, வெற்றிச் செல்வியாகிய கொற்றவையின் குமரனே, வானவர் வணங்குகின்ற வலிமையுடைய படைக்குத் தலைவனே, மாலை கமழ்கின்ற மார்பினனே, நூலனைத்தையும் ஓதாமல் உணர்ந்த முற்றறிவினனே, போர்த்தொழிலில் சிறந்தவனே, வீரத்துடன் போரிடுகின்ற உயர்ந்தவனே, அந்தணர்களின் செல்வமாகிய வேதமாகவும், புலவர்களுக்குச் சொல்மாலையாகவும், தெய்வயானைக்கும், வள்ளிக்கும் கணவனாகவும், வலிமையான காளை போன்றவனாகவும், வெற்றி வேலேந்திய திருக்கரத்தை உடையவனாகவும், கிரௌஞ்ச மலையினைப் பொடியாக்கியவனாகவும், வானவரின் உலகை ஒத்த உயர்ந்த குன்றுகளுக்குத் தலைவனாகவும், கற்றறிந்த புலவர் சிங்கமாகவும், வீட்டின்பத்தைத் தருகின்ற அருள் வள்ளலாகவும், சூரனின் கிளையினை வேரறுத்த மாவீரனாகவும், துன்புறுவோருக்கு நாடிவந்து உதவுகிற எளியவனாகவும் விளங்குகிற திறத்தை வாழ்த்தவேண்டும் (Jagannathan, 1978).

## பெறலரும் பரிசில் பெற்றுயர்வோம்

'நின்னை அளவிட்டுப் புகல்வதற்குரிய நிகரில்லாத பெருமையினை உடையோய்!, உனது மேலான திருவடியைப் பெறவேண்டும்' என்ற பெருவேட்கையுடன் உன்னை நாடி வந்தேன்' என்று திருமுருகனைப் பணிய வேண்டும்.

வான்வரையிலும் உயர்ந்து விளங்குகிற திருமுருகனின் பேருருவினைக் கண்டு மருட்சி கொள்ளாதவகையில், நமது கண்களால் கண்டு பயனுறும்வண்ணம், தன் திருவுருவை அவன் காட்டியருள்வான். நமது அச்சத்தைப் போக்கி, வீடுபேறு வேண்டி வந்த உனது பெருநோக்கத்தையும், நமது வரவையும் குறித்து தான் முன்பே அறிவோம்' என்று அருள்மொழி கூறி திருமுருகன் தேற்றுவான். கடல் சூழ்ந்த இவ்வுலகில், நாம் ஒப்பில்லாத உயர்நிலையாகிய வீடுபேற்றினைப் பெற்றுய்கின்ற வகையில் வீட்டின்பத்தை திருமுருகன் தந்தருள்வான் (Sivagnanam, 2003).

## பழமுதிர்சோலையில் உறைவான்

இங்கு பெருவெள்ளமானது பலவகைக் கொடிகள் போல அசைந்து அருவியில் பெருக்கெடுத்து ஓடும். அவ்வெள்ளமானது அகில் மரத்தை மூழ்கச் செய்யும். சந்தன மரங்களை வேருடன் சாய்த்துப் பாயும். மூங்கில் முதலான பலவகை மரங்களையும் சாய்க்கும். சூரிய மண்டலம் போல விளங்குகின்ற தேன் கூட்டினையும், பலாவின் கனிகளையும் சிதைக்கும். சுரபுன்னையின் மலர்களை உதிர்க்கும். பெருகி செல்கிற வெள்ளத்தால் கருங்குரங்குகளும் அஞ்சும். அவ்வெள்ளமானது, பிடி யானை அஞ்சும்படியாக மோதி, வலிமையான ஆண் யானைகளின் கொம்புகளில் மோதி, பொன்னும், மணியும் ஒருசேர விரவிவரும்படியாக விரைந்து பாயும். வாழை மற்றும் தெங்கின் குலைகளைச் சிதறச்செய்யும். மிளகுக் கொடிகளைச் சாய்க்கும். மயிலும், காட்டுக்கோழியும், பன்றியும், கரடியும் அச்சத்தால் குகையிலே அடங்கியிருக்கும். காட்டெருதுகள் அச்சத்தால் முழங்கும். மலையின் உச்சியிலிருந்து, 'இழும்' என்னும் ஓசையுடன் ஓயாமல் அருவி வீழ்கின்ற பழமுதிர்சோலைக் கிழவனாகவும் திருமுருகன் வீற்றிருக்க வல்லவன் என்று நக்கீரர் பாடியுள்ளார் (Puliyur Kesigan, 2013).

## முடிவுரை

குறிஞ்சிக்கடவுளாகிய திருமுருகன் பல குன்றுகளிலும் உறைபவன். பண்பட்ட அடியவர்கள், திருமுருகனே பரம்பொருள் என்பதை திருப்பரங்குன்றில் உணரலாம். தோற்றமும் இறுதியும் இல்லாத அவன், திருச்சீரலைவாயிலில் பன்னிரு திருமுகமும், பன்னிரு திருக்கரமும் விளங்கக் காட்சியளிக்கின்றான். அவன் முத்தொழிற்கும் முதல்வனாக விளங்குவதை திருவாவினன்குடியில் உணரலாம். திருமுருகனே, ஆறெழுத்தின் அருள்நிலை என்பதனை திருஏரகம் உணர்த்தும். தனக்கு பல

குன்றும் உரிமையுயுடையதாதலை உணர்த்துகிற வண்ணம் திருமுருகன் திருத்தணிகையில் வீற்றிருக்கின்றான். ‘குளிர்ந்த மலையிலும் பசுஞ்சோலையிலும் நீக்கமற நிறைகின்ற முருகாகிய இயற்கைத்தன்மையே இறைத்தன்மை’ என்று உணர்த்தவேண்டி திருமுருகன் உறைகின்ற பலவகையான இடங்களையும் சுட்டியுள்ள நக்கீரர், பழமுதிர்ச்சோலையில் அருவி வீழ்கின்ற அழகும், அதன் சோலையின் பொலிவும் திருமுருகனின் திருக்காட்சியே என்று திருமுருகாற்றுப்படையின் வழியே உணரச் செய்துள்ளார்.

## References


Jagannathan, Ki.Va., (1978) Thirumurugatrupadai Vilakkam, Amudha Nilayam Ltd, Chennai, India.

Puliyur Kesigan, (2013) Thirumurugatrupadai, Saratha Pathippagam, Chennai, India.

Sivagnanam, S., (2003) Thirumurugatrupadai Urai, 1st Edition, Sarasvati Mahal Library, Thanjavur, India.

Vasanthakumar, (2017) Thirumurugatrupadai, Karpagam Academy of Higher Education, Coimbatore, India.



## Funding

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



## About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License



## Cite this Article

R. Madhankumar, The Holy Revival of Thirumurugan at Arupatai Veedu, Indian Journal of Tamil, 3(2) (2022) 49-55. https://doi.org/10.54392/ijot2229